பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6.

# குறள் நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ.,எம்.ஓ.எல்.,பிஎச்.டி

கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழக நிலையை அறிவதற்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆசிரியர் இலக்குவனாரால் எழுதப்பட்டுள்ள தொல்காப்பிய ஆராய்ச்சியைப் படியுங்கள்.

தமிழ் விலை உரு. 4-00
ஆங்கிலம் ,, ,, 25-00

கிடைக்குமிடம் :
"குறள்நெறி" வெளியீட்டகம்
மதுரை 5.

மலர் 1 | மதுரை ஐப்பசி கஎ (2-11-66) வெளியூர் ஐப்பசி கஅ (3-11-66) | இதழ் 137

18 ஆண்டு ஆட்சியின் பயனைப் பாரீர் !

# "உணவு நிலைமை மனநிறைவளிக்க வில்லை!"

## பாராளுமன்றத்தில் உணவமைச்சர் அறிவிப்பு-

மக்களவையில் கூளிர் காலக் கூட்டத் தொடர் இன்று தொடங்கியது. மக்களவையில் கேள்வி நேரத்தில் உணவு நிலைமை பற்றி வினவப்பட்டபொழுது அவர் இவ்வாறு கூறினார்.

புதுதில்லி நவ. 1

நாட்டின் தற்போதைய உணவுநிலைமையை அரசு நன்கு அறிந்துள்ளது என்றும் உணவு நிலைமையை முன்னேற்றுவதற்கு அரசு ஆவன செய்யும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

"நல்ல விதைகள், விரைந்து பயிரிடுதல் மிகுதியான சீரான கொள்முதல், உணவுப் பொருள் இறக்குமதியை மிகுதிப்படுத்தல், போன்ற நடவடிக்கைகளால் நாட்டின் உணவு நிலைமையைச் சீர்படுத்த அரசு முயன்று வருகிறது.

எலிகளாலும் பூச்சிகளாலும் நாட்டின் உணவுப் பெருக்கத்தில் பாதி அளவு வீணாகி விடுகிறது. அறிவியல் வல்லுநர்களைக் கலந்தாய்ந்து அரசு இவ்வழியைத் தவிர்க்க ஆவன செய்யும்.

உணவுத் துறைத் துணை அமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனன் "நாட்டில் எங்கும் பரவலாக இருக்கும் வறட்சி நிலை காரணமாக இந்த ஆண்டு உணவுப் பெருக்கம் எட்டுக்கோடி டன்னுக்கும் எட்டரைக்கோடி டன்னுக்கும் இடையே இருக்கும்" எனக் குறிப்பிட்டார். மேலும் "இராசஸ்தான் பீகார், ஒரிசா போன்ற வறட்சியாற் பிணிக்கப்பட்ட மாநிலங்களில் துரிதமான உதவி வேலைகள் நடந்து வருகின்றன. இந்திய மாநிலங்களிலேயே பீகார் தான் உணவு நிலையில் மிகவும் பின் தங்கிய பகுதியாக உள்ளது. எனவே பீகாரின் உணவு நிலைமையைச் சமப்படுத்தச் சிறப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன" என்றும் அவர் கூறினார்.

உத்தரப் பிரதேசத்தின் உணவு நிலைமையைப் பற்றி வினவப்பட்டபொழுது இது குறித்து அம்மாநில அரசுடன் ஆய்வு நடாத்தத் தாம் வியாழனன்று இலக்னோ செல்வதாக அவர் கூறினார்.

ஃ ஃ ஃ

# 'ஐந்தாவது உருக்காலைக்குப் போதிய பணமில்லை'

## இந்திரா கைவிரிப்பு !

### இத்தனை கிளர்ச்சியும் இதற்குத்தானா ?

புதுதில்லி அக் 31—

ஐந்தாவது உருக்காலைக்குப் போதிய பணமில்லை எனத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி காங்கிரசுப் பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் கொண்டா அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

"முதனமை பற்றிய கருத்து தக்க காலத்தில் செலுத்தப்படும். அச்சுறுத்தி எதனையும் ஏற்க வற்புறுத்துவது வீணே ஒன்றாகும்.

ஆந்திர மாணவர் கிளர்ச்சிப் போக்கு மிக வருந்தத்தக்கது. உருக்காலை உருவாக்குவது எளிய செயலில்லை. கோடிக்கணக்கான பணம் செலவாகும். ஏற்கனவே உள்ள ஆலைகளைச் செயல்படுத்த அரசுக்குள்ள தொல்லை கொஞ்சமல்ல. இங்கு ஆலை எழுப்பும் செயல் ஒரு கிளைக் குழுவின் ஆய்வில் உள்ளது. தொழில் வளப் பெருக்கை மாநிலத்திற்கே பிரித்துக் கொடுத்து விடும் நோக்கம் ஆய்வில் உள்ளது. பொருளாதார நிலை வளர்ந்தால் இவற்றையெல்லாம் கருத்திற் கொள்ள இடமிருக்கும். இப்போதுள்ள நிலையில் வேளாண்மைக்கே முதன்மை கொடுத்துச் செயற்பட முடியும்.

அதனால் காங்கிரசு உறுப்பினர் மக்களுக்கு நிலையை விளக்கிக் கூறி உள்ள தொழிலுக்குத் தோள் கொடுத்து ஊக்குவிக்கச் செய்ய வேண்டுமென இந்திரா காந்தி கேட்டுக் கொண்டா

# வன்முறைச் செயல்களால் நாட்டின் எதிர்காலம் இருண்டுவிடும்

## மாணவர் கிளர்ச்சி குறித்துக் கல்வியமைச்சர் சக்ளா

புதுதில்லி நவ, 1—

நாடெங்கும் மாணவரிடையே அமைதியின்மையும், கிளர்ச்சியும் ஏற்பட்டு வருவதுகுறித்துப் பாராளுமன்றத்தில்கல்வியமைச்சர் சக்ளாஓர் அறிக்கை அளித்தார்.

அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது :

"மாணவர்கள் தங்கள் பயிற்சிக் காலங்களில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பாடுபடவேண்டும். கல்வி பயிலும் காலத்தில் மாணவர்கள் ஒழுங்குநிலை தவறிச் செல்லுதல் கூடாது. தங்கள் குறைகளுக்குத் தீர்வு காணவோ, தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளவோ மாணவர்கள்வன்முறைச் செயல்களைக் கையாண்டால் நாட்டின்எதிர்காலம் இருண்டுவிடும். இது எண்ணிப்பார்க்கையில் வருத்தந் தரக்கூடிய ஒன்றாகும்.

மாணவர்கள் தங்கள் குறைகளை நிறைவுபடுத்தக் கல்வித் துறை அலுவலர்களை அணுக வேண்டும். கல்வித்துறை அலுவலர்கள் மாணவர்களின் உண்மையான குறைகளைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளைப் பற்றி ஒரு முடிவுக்குவருவர். மாணவர்கள் கல்வித்துறை அலுவலர்களின் முடிவுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

மாணவர்களின் நலனைப் பாதுகாப்பதில் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கட்கும் தக்க பங்குண்டு. மாணவர்களைப் பொறுத்தவரையில், சட்டம் ஒழுங்குச் சிக்கல் ஏதேனும் எழும்புமேயாயின் அதற்குக் காவற் படையினரின் துணையை நாடுவதும் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களின் பொறுப்பாகும்.

மாணவர்களை அரசியற் கட்சிகள் தங்கள் சார்பாளர்களாகவோ தங்களது கருவியாகவோ எண்ணக் கூடாது. அரசியல்வாதிகள் பல்கலைக் கழகங்களைத் தீய செயல்களாற் கறைப்படுத்தவியலாத தூய்மையான இடம் எனக் கொள்ளல் வேண்டும்"

இவ்வாறு கல்வியமைச்சர், சக்ளா, மாணவர் அமைதியின்மை பற்றிய தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# நவம்பர் 6. நாடெங்கும் கிளர்ச்சி நாள்.

குறள் நெறி
தமிழ் வாழ்க
தி. வ. ஆண்டு 1997 ஐப்பசி 17 புதன் (2—11—66)

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக்கொளல். —குறள் கூஎ

# ஆந்திராவில் மாணவர் கிளர்ச்சி

மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவது என்பது இன்று உலகெங்கும் பெரு வழக்காகி விட்டது. மாணவர்களின் கிளர்ச்சியால் நாட்டின் ஆட்சியமைப்பே மாறிவிடுகின்றது. தூய்மையும், தன்னலமற்ற தன்மையும், கொள்கைப் பற்றும் மாணவர்களின் நீங்காப் பண்பியல்புகளாம் உள்ளமையால் மாணவர்களின் கிளர்ச்சி என்றும் தோல்வி யுறுவது கிடையாது.

கல்வித் துறையில் ஈடுபடும் மாணவர் கிளர்ச்சிகளில் ஈடுபடலாமா என்பர். இக்கேள்வி பிணியை நோயுற்றோர்க்கு அறுவை செய்யும் மருத்துவரை நோக்கி "அறுப்பது அறமா?" என்று வினவுவதுபோல் உள்ளது.

நோய்க்கு மருந்துபோல், மன்பதை நோய்க்கு மாணவர் கிளர்ச்சியும் வேண்டப்படுகின்றது. பல நாட்டு அரசியல் வரலாறுகளை நோக்கின் இவ்வுண்மை புலனாகும். ஏன் நம் நாட்டு வரலாறே நற்சான்று பகரும். மாணவர்கள் கிளர்ந்து எழுகின்றார்கள் என்றால், அங்கு ஏதோ தவறு நிகழ்ந்துளது என்றுதான் கொள்ளவேண்டும். கிளர்ச்சியின் காரணத்தை அறிந்து அதனைப் போக்குவதற்கு முயலாது மாணவர்களைக் குறை கூறிக்கொண்டிருப்பதில் பயனின்று. கிளர்ச்சிக்குரிய உண்மைக் காரணத்தை அறிய முயலாது புண் வைத்து மூடுவதுபோல் பொய்க் காரணங்களைக் கூறி மழுப்புவது கூடாது.

சில நாட்களாக ஆந்திர மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அக்கிளர்ச்சி இப்பொழுது உச்ச நிலையை அடைந்துவிட்டது. அழிப்பும் பொருளிழப்பும் உண்டாகியுள்ளன. போக்குவரத்துத் தொடர்பும் தடைபட்டுள்ளது. விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் நடந்துகொண்டிருக்கின்றன. மாணவர்கள் எதற்காகக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர் என்பதனை அறிந்திருந்தும் அதனைப் போக்க முற்படாது ஆட்சியாளர்கள் இருப்பது மிகமிக வருந்தத்தக்கது.

கிளர்ச்சிகட்குப் பின்னரே மக்கள் விருப்பத்தை நிறைவேற்றுவது என்ற கோட்பாட்டை ஆட்சியாளர் இன்னும் கொண்டிருப்பது நல்லாட்சிக்கு உரியது ஆகாது.

செய்வது ஊசமானியப் பல்கலைக் கழகத்துணை வேந்தராம் திரு இரெட்டியாரை மாற்றவேண்டாமென்பதற்கும், விசாகப்பட்டினத்தில் உருக்காலை நிறுவவேண்டும் எனபதற்கும் ஆகும்.

துணைவேந்தர் இரெட்டியார் அவர்களை ஆசிரியர் மாணவர் அனைவரும் விரும்பும் போது எதற்காக மாற்ற வேண்டும்? தொடர்புடையரால் விரும்பப்படுவதை நிறைவேற்ற வேண்டியது அரசின் கடனன்றோ? துணைவேந்தரும் தம்மை நீக்கியது பொருந்தாது என்று தலைமை மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார். தலைமை அறமன்றமும் அவர் வழக்கை ஏற்றுக் கீழ்மன்ற செயல் முறைகட்குத் தடை விதித்துள்ளது. அங்ஙனமிருக்க அதற்குள் புதிய துணைவேந்தரை நியமித்துப் பணிபுரிய விடுப்பது எங்ஙனம் அறநெறிக்கு ஒவ்வும்?

பல்கலைக் கழகப் பதவிகள் இன்று திறமை, தகுதி நோக்காது அரசியல் சார்பை நோக்கி அளிக்கப்படுகின்றன.

அண்மையில் மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஆளுங்கட்சியைச் சார்ந்திருப்பதாலேயே அவர் அப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். கட்சிச் சார்புக்காக அமர்த்தப்படுவார்கள் கட்சிக் கண்ணோட்டமின்றி எங்ஙனம் செயலாற்ற இயலும். ஆகவே கல்வி வளர்ப்புப்பண்ணையாம் பல்கலைக் கழகங்கள் அரசியல் பதவிவேட்டைக் காடுகளாகி பூசல்களுக்கு நிலைக்களமாகிவிடுகின்றன.

ஆந்திர மாணவர்களும் ஆசிரியர்களும் பல்கலைக்கழகப் பேரவையும் (Senate) ஆட்சிக்குழுவும் (Syndicate) விரும்பும் ஒருவரை நீக்க முற்படுவது மக்களாட்சியில் நடைபெறக் கூடாத ஒன்றாகும்.

அடுத்து உருக்காலை நிறுவுவது என்பது நடுவிட அரசின் வல்லாட்ட (சூதாட்ட)க் காயாகிவிட்டது. தென்மாநிலங்கள் அனைத்தும் தத்தம் மாநிலங்களில் நிறுவ வேண்டுமென்று வலியுறுத்துகின்றன. தமிழ்நாட்டில் அது நிறுவப்படுவது உறுதியாகியதுபோல் தோன்றியது. ஆனால் பின்னர் அது கானல் நீராகிவிட்டது.

இதுவரை நிறுவப்பட்டுள்ள உருக்காலைகள் அனைத்தும் வடமாநிலங்களிலேயே உள்ளன. இனி நிறுவப்படவேண்டியது தென்மாநிலங்களில்தான். தமிழகமும் ஆந்திரமும் கன்னடமும் விரும்புகின்றன. அந்தந்த மாநிலம் அதனதன் பொறுப்பில் நிறுவிக்கொள்ளலாம் என்று கூறிவிட்டால் அயல்நாட்டார் துணைகொண்டு தம் வசதிக்கேற்ப நிறுவப்பட்டுவிடும். மாநிலங்கட்கு அவ்வுரிமையும் தரப்படவில்லை. ஆகவே இந்தியக்கூட்டரசு அவ்வம்மாநிலங்கட்கு அவ்வுரிமையைக் கொடுத்துவிடல் நன்று. எவ்வாற்றானும் குடிதழுவிக்கோலோச்ச ஆட்சியாளர் முயலல் வேண்டும். மாணவர் கிளர்ச்சியை வன்முறையால் அடக்க நினையாது செம்முறையால் அகற்ற முயல்வதே அறிவுடைமையாகும்.

ஆந்திர மாணவர்களின் வேண்டுதலுக்குச் செவிமடுத்து அங்கு நல்லமைதி நாட்ட ஆட்சியாளர் முன் வருவார்களாக.

"கிளர்ச்சிப் பின்னர்தான் கேட்பது கிடைக்கும்" என்ற நிலையை மாற்றுதல் வேண்டும். அதுவே மக்கள் நலனறிந்து ஆளும் அரசின் பொறுப்பும் கடனும் ஆகும்.



## சென்னை மாநகரவையின் 279-வது தொடக்க விழா

சென்னை நவம்பர் 1

சென்னை மாநகராட்சியின் 279-ஆவது தொடக்க விழா நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது.

தொடக்க உரையாற்றிய டாக்டர் பி. வி. செரியன் மாநகராட்சிக்கு இருக்கும் பொறுப்பையும் மக்களின் பொதுநல ஊழியமாக மாநகராட்சி திகழ வேண்டிய தன் இன்றியமையாமையையும் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் எம். பக்தவத்சலம் தலைமையுரையில் பிற நகரமன்றங்கட்குச் சென்னை மாநகரவை ஒரு முன் மாதிரியாகத் திகழவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். திருவாட்டி தாரா, செரியன் சென்னை மாநகராட்சி குழந்தைகளின் உடல் நலம் பற்றிய ஆக்கவேலைக்கு உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இறுதியில் மாநகராட்சித் துணைத்தலைவர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

# கல்விக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைக்கு ஏற்றவையன்று!

கல்விக் குழுவின் பரிந்துரைகளைப் பற்றி ஆய்வு நடாத்த மாநிலக் கல்வித்துறையினரின் சார்பாக நடைபெற்ற கருத்தரங்கில் ஏற்று பேசுகையில் "கல்விக் குழுவின் பரிந்துரைகளை நடத்தினால் கல்வியில் முன்னேற்றம் ஏற்புப" படுவதைவிடப் பெருந்தீங்குகள்தான் விளை என்று அவர் கூறினர்.

சென்னை நவ 1. இக் கருத்தரங்கை மாநில முதலமைச்சர் எம். பக்தவத்சலம் தொடக்கி வைத்தார். அவர்தனது தொடக்கவுரையில் இப்போதைய கல்வி முறையைத் தான் மாற்ற விரும்பவில்லை எனக்கூறினார்.

சென்னைப் பல்கலைகழகத் துணைவேந்தர் டாக்டர். இலக்குமணசாமி முதலியார் மேலும் கூறியதாவது:

சென்னைமாநிலத்தில் கல்வி முறை எவ்வாறுள்ளது' என்பதைக் கருத்திற் கொள்ளாமல் கல்விக்குழு பரிந்துரைத்துள்ளது. எனினும் கல்விக்குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை ஏற்று நடத்தினால் கல்வி முன்னேற்றம் அடையாது; பிற்போக்காகத் தான் இருக்கும்.

உயர்நிலைப் பள்ளிகளில் புகுமுகவகுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கல்விக் குழுவின் பரிந்துரை ஏற்று நடத்தக் கூடிய திட்டமல்ல! இதற்கு முதற் காரணம் ஆசிரியர் பற்றுக்குறையே.

கட்டணமற்ற உயர்நிலைப் பள்ளிக் கல்வி வரவேற்கத் தக்கதொன்றாகும். எனினும் இதனால் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பள்ளி மேலாண்மைக் குழுவினால் தகுதியான ஆசிரியர்களை வேலைக்கமர்த்த இயலவில்லை. அவ்வாறு தகுதியான ஆசிரியர்கள் வேலைக்கு வந்தாலும் அவர்கள் அரசுத்துறைப் பதவிகளையே விரும்புகின்றனர். எனவே அவர்கள் அரசினர் துறையில் வேலை தேடிக்கொண்டு சென்று விடுகின்றனர்.

கல்வி முன்னேற்றத்தில் அரசினர் மிகுந்த கருத்துச் செலுத்த வேண்டும். ஒரு நாட்டின் ஆட்சியைப் போன்றே கல்வியும் கருத்துச் செலுத்திச் செம்மைப் படுத்த வேண்டியதொன்றாகும்.

இவ்வாறு டாக்டர். இலக்குமணசாமி முதலியார் கூறினர்.

கல்வித்துறை இயக்குநர் டாக்டர் பால் கருத்தரங்கிற் பங்கு கொண்டோரையும் வந்திருந்தோரையும் வரவேற்றும் பேசினர். துணை இயக்குநர் ஆர். சண்முகம் நன்றி புகன்றனர்.

## கலையைச் சுவைக்கக் கட்டணம்!

ஆக்ரா அக். 31— இதுவரை தாசமகாலை கட்டணமின்றிக் கண்டு களித்தவர்கள் [இனி தாசமகாலைப்பார்க்க வேண்டுமானால் நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டும். இதுவரை கோடிக்கணக்கானவர்கள் உள்நாட்டாரும் அயல்நாட்டவரும் தாசமகாலைக் கண்டு அதன் பேரழகை வியந்து போற்றியுள்ளனர்.

இனி தாசமகாலைப் பார்க்க வருவோர் வெள்ளிக்கிழமை தவிர, மற்ற நாட்களில் இருபது காசுகள் நுழைவுக் கட்டணம் செலுத்தவேண்டும். பதினைறு வயதுக்கு உட்பட்டவர்கட்கு இக்கட்டணம் கிடையாது.

தமிழக ஆளுவோரே! வருமுன் காப்பீராக!

## கொசப்பேட்டை உருக்காலைக்காக ஆந்திர மாணவர் கிளர்ச்சி!! தொடர்வண்டிகள் நிறுத்தப்பட்டன.

வால்டேர்—அக். 30 விசாகையில் எஃகு ஆலை ஏற்படுத்த வேண்டுமென வேண்டிப் பல கல்லூரி மாணவர்கள் கூடி நடத்திய ஆரவாரத்தில் தொடர்வண்டிப் போக்குவரத்து தடைப்பட்டது.

வால்டை வரையடுத்த கோபால் பட்டினத் தொடர்வண்டிப் பாதையில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கூடி காலை 11-40 மணியிலிருந்து தொடர்வண்டியைத் தடுத்து நிறுத்தினர்.

கோட்டப் பாளையத்தில் போக்குவரத்திற்கான கருவிகளை நொறுக்கிச் சேதப்படுத்தினர். சரக்கு வண்டிகளின் இணைப்புக் குழாய்கள் கழற்றிவிடப்பட்டன. வண்டிகளைப் பூட்டி அரக்குவைத்து முத்திரையிட்டக் காகித அட்டைகள் கிழித்தெறியப் பட்டன. பல வண்டிகள் ஓடாது நின்று விட்டன.

பொருட்களைச் சேதப்படுவதால் யாருக்கு என்ன பயன்? இதனால் நாட்டுக்குத்தான் இழப்பு என்பதை மாணவர்கள் அறியார்களா? எனினும் வன்முறைக் கிளர்ச்சிக்குப் பின்னரே எத்தகைய திட்டத்திற்கும் முடிவுக்கு வருவது நம் அரசினர்க்கு இயல்பாகிவிட்டது. சேலம் எஃகு ஆலை குறித்துத் தமிழகத்திலும் இதுபோன்ற கிளர்ச்சி ஏற்படா வண்ணம் நான்காவது திட்டத்தில் சேலம் உருக்காலைத் திட்டத்தை இணைத்தலே நம் ஆளுவோர்க் கழகு.

## கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

திருவனந்தபுரம் அக் 30— உள்பட ஏறத்தாழ 3500 ஆசிரியர்கள் நவம்பர் 7இல் வேலை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

நூற்றிருபதாயிரம் கல்லூரி மாணவர்கள் அடுத்த ஆறு கிழமை அளவில் அரையாண்டுத் தேர்வு எழுதவுள்ளனர். அரசினரே நேரடியாகத் தங்கள் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென ஆசிரியர்கள் கேட்டுள்ளனர். கடந்த ஆண்டு அக்டோபர் முதல் வரவேண்டிய சம்பள உயர்வு இதுவரை கொடுக்கப்படாததே இந்நடவடிக்கைக்குக் காரணமாகும்.

முன்னாள் ஆளுநர் உயர்திரு கிரி அவர்கள் திருத்தியமைத்த ஊதியம் மிக மிகக் குறைவானதென்றும், அதனை 1964 அக்டோபர் 1 முதல் கொடுத்தாக வேண்டுமென்றுஞ் சொன்னர். இருந்தாலும் 1965 அக்டோபர் 1ஆம் நாள் முதல் கொடுக்குமாறு ஆணை பிறப்பிக்கப் பட்டது. அப்போதே அரசநிர்வாகத்தினருக்கு உருபா 58,00,000 பண உதவியும் அளித்தது. திருத்த முமம் ஆணையும் இதுநாள் வரை செயல்படுத்தப்படாத காரணத்தால் ஆசிரியருக்கான ஊதியத்தை அரசே கொடுக்கவேண்டுமெனக் வேண்டுவதாக ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. சுப்பிரமணியம் அறிவித்தார்.

இச் சம்பளத் திட்டமும் இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் கண்டிருப்பதை யொட்டி பல்கலைக் கழக ... சக்ளா அரசினர் பள்ளியிலும் தனியார் பள்ளியிலும் ஊதியம் ஆசிரியருக்கு ஒன்று போல் வழங்கப்பட வேண்டுமென வெளியிட்டுள்ளனர் நடுவணரசு 80 விழுக்காடு தொகை கொடுக்கும் போது, 'மாநில அரசு கொடுக்க வேண்டியது 20 விழுக்காடுதான் என்பதையும் திரு. சுப்பிரமணியம் சுட்டிக்காட்டினர்.

ஊழியரின் இடையுறுவேலை புறுதியும் வாழ்க்கை வசதிகளையும் நாடுவது வேறொரு வேண்டுகோள். இதற்கு அடிப்படைக்காரணம் பெண்பாலர் துன்புறுவதே. அவர்களிற் பலர் நீண்ட காலமாக உறுதியற்ற நிலையில் வேலை பார்த்து வருகின்றனர். இது உடனடியாக ஒழிக்கப்பட வேண்டியதாகும்.

வேலை நிறுத்தம் கைவிடப் படவேண்டுமானால் (1) ஒப்புக்கொண்டபடி 1—10—65 முதல் ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் (2) 1-10-64 முதல் பாக்கி கொடுக்கப்பட வேண்டும் (3) ஊழிய உறுதி வேண்டும் (4) அரசினரே நேரடியாக ஊதியம் கொடுக்க வேண்டும் (5) சக்ளா திட்டப்படி ஊதியம் திருத்தி அமைக்க வேண்டும் எனச் சங்கத் தலைவர் கூறினர்.

ஆசிரியர்களின் வேண்டுகோள் அனைத்தும் மிக நேர்மையானவை. நாட்டின் நலங்கருதி உடனடியாக அரசு கருத்திற் கொண்டு ஆவன செய்யுமெனவே நாடு எதிர்பார்க்கும்.

## புதுச்சேரிக்குப் புதியஆளுநர்

புதுச்சேரி நவம்பர்-1 ... எடுத்திருப்பதால் அப்பதவிக்குக் கோவாவின் முன்னாள் ஆளுநரும் துணைப் படைத் தலைவருமான பி. சிவசங்கர் அமர்த்தப்பட்டுள்ளார். இவர் புதுச்சேரி வழக்கு மன்றத் தலைவர் திரு. மகராசன் முன்னிலையில் உறுதிமொழி கூறிப் பதவிப் பொறுப் பேற்றார்.

## நடுவண்அமைச்சரவை மீதுநம்பிக்கையில்லாத் தீர்மானம்.

நாளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

புதுதில்லி நவ. 1— பாராளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமானதும், நடுவண் அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இத் தீர்மானம் சனசங்கத் தலைவர் கி. எம். திரிவேதியால் கொண்டு வரப்பட்டது. இத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதன் காரணம் கூறப்படவில்லை. எனினும் இத்தீர்மானம் பாராளுமன்றத்தில் நாளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரியவருகிறது.

# அன்பர் அஞ்சல்

ஐயன்மீர்,

வணக்கம் பல. இன்று தமிழ் நாட்டில் தமிழ் முதன்மொழி, ஆட்சி மொழி, பயிற்றுமொழி என்று இருந்தாலும் இன்னும் உயர்நிலைப் பள்ளிகளில் ... நிகழ்ச்சிகளும் ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன. ஆங்கிலர் ஆட்சியில் ஆங்கிலம் முதன்மொழியாக இருந்த போது அம்மொழியிற்றான் யாவும் நிகழ்ந்தன.

ஆங்கிலப்புலமையுடையவரே தலைமை ஆசிரியர்களாகவும் அமர்த்தப் பெற்றனர். ஆனால், ஆங்கிலர் ஆட்சி ஒழிந்து நாடு விடுதலை பெற்று பத்தொன்பது ஆண்டுகளாகியும் தமிழ்நாட்டில் எல்லா நிகழ்ச்சிகளும் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றன. தமிழில் பிழையின்றி எழுதத் தெரியாத, தமிழ்ப் புலமையற்ற ஆங்கிலப் பட்டம் பெற்றவர்களையே இன்னும் தலைமையாசிரியர்களாக அமர்த்துகின்றனர். இப்பொழுது ஆங்கிலம் மூன்றாவது மொழியாகக் கருதப்படினும் முதன்மொழி போன்றே எல்லாம் நடத்தப்படுகின்றன. தமிழ் முதன்மொழியாக இருக்கும் இந்நாளில் தமிழிற் பட்டம் பெற்றவர்களையன்றோ தமிழ் நாட்டு உயர்நிலைப்பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக அமர்த்தல் வேண்டும்? அவ்வாறு செய்தால்தானே எல்லா நடவடிக்கைகளும் தமிழில் நடைபெற முடியும்.

இற்றைஞான்று முதனிலைத் தமிழாசிரியர் என இருப்பவர்களில் பலரும் தமிழ்ப் புலமைப் பட்டம் பெற்று பல்கலைக் கழகப் பயின்று ஆசிரியர் பயிற்சியும் பெற்றவர்களாகவே இருக்கின்றனர். ஊதிய முறையிலும் ஆங்கிலம் பயின்று பட்டம் பெற்று பயிற்சி பெற்ற ஆசிரியர்களை ஒப்பவே பெறுகின்றனர். அத்தகையோரை ... தலைமையாசிரியராவதற்குரிய தேர்வு வைத்துத் தேர்ந்தெடுப்பது போன்று முதனிலைத் தமிழாசிரியர்களையும் தேர்ந்து எடுப்பது தானே முறை!

ஐந்து ஆண்டோ, பத்தாண்டோ முதனிலைத் தமிழாசிரியர்களாகப் பணிபுரிந்தவர்கள் தலைமையாசிரியர்க்குரிய தேர்வில் வெற்றி பெற்றுவிடின் அவர்களைத் தலைமையாசிரியர்களாகத் தமிழ்நாட்டு உயர்நிலைபள்ளிகளில் அமர்த்துவது முறையன்றோ! அஞ்ஞான்றே தமிழ் முதன் மொழி, ஆட்சி மொழி, பயிற்று மொழி என்பது பொருத்தமாயிருக்கும். எல்லாம் தமிழிலேயே நடைபெற வாய்ப்பு உண்டு.

தமிழக அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் தாங்களும் தமிழர் என்பதை மறவாது இதனை நன்கு ஆராய்ந்து ஆவன செய்து "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்", என்ற பாரதியின் கனவை நனவாக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
தமிழ் உரிமை வேட்பர்.

## பஞ்சாப்-அரியான மாநிலங்களுக்கு குடியரசுத் தலைவர் வாழ்த்து!

புதுதில்லி நவ. 30 பஞ்சாப் மாநிலத்தை, இந்தி மொழி பேசும் பகுதியை அரியானா என்றும், பஞ்சாபி மொழி பேசும் பகுதியை பஞ்சாப் மாநிலம் என்றும் பிரித்து அவைகளுக்குப் புதிய அமைச்சரவைகள் அமைக்கப்பட விருக்கின்றன. அரியானா முதலமைச்சர் திரு. பகத்தயாள்சர்மாவும்பஞ்சாப் முதலமைச்சர் திரு. குர்முக் சிங்கும் இன்று புதுதில்லியில் நன்னிரவில் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். அவ்விருமாநிலங்களையும் பற்றியும் குடியரசுத் தலைவர் தமது வாழ்த்துரையில் கூறியதாவது: "வரலாற்றிலே களம் பல கண்டு பகைவர்களை வெற்றிகண்ட பெருமை இவ்விருமாநிலங்களுக்கே உரித்தாகும். அந்த கைய வீரத்துடனும், பண்பாட்டுடனும், கட்டுடனும், நீர் மின்சாரம், போன்றவைகளில் ஒருவருக்கொருவர் கொடுத்துதவி வளத்துடன் வாழ்வார்களாக" என்று கூறினர்.

உருக்காலைக் கிளர்ச்சியின் விளைவு!

## விசய வாடாவில் மூவர் கொல்லப்பட்டனர். 16 பேர் புண்பட்டனர்!

விசயவாடா, 31— விசயவாடாவில் காவல் நிலையத்தைச் சூழ்ந்து ஆரவாரம் செய்த மக்கள்மீது கண்ணீர்ப் புகை வீசப்பட்டது. பின்னர் தடியடி நிகழ்த்தப்பட்டது. இதற்குப் பின்னரும் கிளர்ச்சியாளர்கள் கடைகளைச் சூறையாடிப்பொருட்களைச்சிரழித்ததால் துப்பாக்கிக் குண்டுவீச்சும் நிகழ்த்தப்பட்டது. இதன் விளைவாக மூவர் மரணமடைந்தனர். 16 பேர் புண்பட்டனர். கொசப்பேட்டையில் உருக்காலையொன்று நிறுவ வேண்டுமென்பதற்காகத் தொடர்ந்து ஆந்திரமாநில மக்கள் கிளர்ச்சி செய்து வருவதும் அறிந்ததே. இக்கிளர்ச்சியின் விளைவாகவே மேற்கண்ட துப்பாக்கிக்குண்டு வீச்சு நிகழ்த்தப்பட்டது.

குண்டூர் காவல் நிலையத்தைத் தாக்கிய கும்பலைக் கலைக்க அடுத்தடுத்துக் கண்ணீர்வுகை புகைக் குண்டுகளை வீசினர். பயனில்லாது கட்டுக்கடங்காதுபோகும் நிலையில் காவலர் சுட்டனர். இருவருக்குப் பெரும்புண், ஒருவர்நிலை கவலைக்கிடமானது.

செய்தித்தாள் எழுத்தர் ஏறிச் சென்ற மகிழுந்து மீதும் கல்வீச்சு நிகழ்ந்தது. சிக்கந்தராபாத் தொடர்வண்டி நிலையத்துள் மாணவர் புகமுயன்றதைத் தடுத்த மூன்று காவலர் புண்பட்டனர். கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்திக் கூட்டத்தைக் கலைத்தனர். வண்டிபோக்கிற்கான அடையாளக் கருவிகள் நாசமாக்கப் பட்டன.

துன்புற்றதும், இறந்ததும் நம்மவர்களே-காவலரும் நம்மவர்களே சேதமானதால் ஏற்பட்ட நாட்டிழப்பும் நம்முடையதே. தேவையை நாடி நிறைவேற்றிக்கொள்ள வன்முறையை விடுத்து அறநெறிகளைப் பின்பற்றுவதே அறிவுடைமை.

## தொண்டாமுத்தூர் தொகுதியில் போட்டி இடுவோர் யார்?

(குறள்நெறிச்செய்தித்துறை)

தொண்டாமுத்தூர் நவ. 1 தொண்டாமுத்தூர் தொகுதியில் ஆளுங்கட்சியான காங்கிரசுக் கட்சியின் சார்பில் திரு. திப்பையா (தொண்டாமுத்தூர் ஒன்றியப்புத்தலைவர்,) என்பவர் சட்ட மன்றத் தேர்தலில் நிற்க மேலிடத்தில் உரிமைச் சீட்டுக் கேட்டுள்ளார். ஆனால் சென்ற தேர்தலில் காங்கிரசின் சார்பில் அத்தொகுதியில் நின்று வென்ற எல்லமநாயுடு (எம். எல். ஏ.) என்பவரும் உரிமைச் சீட்டுக் கேட்டுள்ளார். இவர்களில் யார் நின்றாலும் எதிர்த்துப் போட்டியிட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த இரா. மாணிக்கவாசகம் முடிவு செய்துள்ளார் அந்தத் தொகுதியில் நிற்க சென்ற 21—10—66 அன்று நாவலர். இரா. நெடுஞ்செழியன் தலைமையில்கோவை வந்த தேர்தல் ஆய்வுக் குழுவிடம் மாணிக்கவாசகம் உரிமைச் சீட்டுக் கேட்டுள்ளார். மாணிக்கவாசகம் தேர்தலில் நின்றால் உறுதியாக வெற்றி வாய்ப்பை அடையலாம் என்று அந்தத் தொகுதியில் கருத்து நிலவுகிறது.

"குறள் நெறி" நாளிதழ்

தனி இதழ் விலை காசு 6.
அஞ்சல் வழியாகப் பெறுவதற்குத் திங்கள் கட்டணம் உரு. 2-50
ஆண்டுக்கட்டணம் உரு. 25-00
புரவலர் கட்டணம் உரு. 1000-00

விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
விளம்பரங்கள் பெற்று அனுப்புவோர்க்கு 25% கழிவு உண்டு.

"குறள் நெறி" திங்களிருமுறை : தமிழ் :
தனி இதழ் விலை 25 காசு.
ஆண்டுக் கட்டணம் உரு. 6-00
இரண்டாண்டுக் கட்டணம் உரு 10-00
புரவலர் கட்டணம் உரு. 100-00

"குறள்நெறி" திங்களிருமுறை : ஆங்கிலம்:
தனி இதழ் விலை 20 காசு.
ஆண்டுக் கட்டணம் உரு. 5-00

ஊர்கள் தோறும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

விவரங்கட்கு:
ஆசிரியர்
'குறள்நெறி'
திருப்பரங்குன்றம்
மதுரை-5

குறள் நெறி

# கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதம் உயருமா?

## முதலமைச்சர் பக்தவத்சலம் தகவல்-



சென்னை நவ. 1

கல்விக்குழுவின் பரிந்துரைகளைப்பற்றி ஆய்வு நடத்த மாநிலக் கல்வித் துறையினரின் சார்பில் இங்கு நடைபெற்றகருத்தரங்கு ஒன்றை முதலமைச்சர் பக்தவத்சலம் தொடக்கி வைத்தார். (இக்கருத்தரங்கில் சென்னைப்பல்கலைக் கழகத் துணை வேந்தரும் கலந்து கொண்டார்)

அண்மையில் நாட்டின் கல்வி முன்னேற்றத்துக்கான பரிந்துரைகளை அரசினர்க்களித்த கல்விக்குழு, ஆசிரியரின் ஊதிய விகிதம் உயர்த்தப்படவேண்டுமென்றும் பரிந்துரைத்துள்ளது. இதைப் பற்றிக் முதலமைச்சர் எம், பக்தவத்சலம் தமது கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்

"ஆசிரியரின் ஊதியம் பற்றி கல்விக் குழு பரிந்துரைத்துள்ளது மிகவும் அத்மான ஊதிய விகிதமாகு நடுவண் அரசினர் நிதிஉதயளிப்பதைப் பற்றி ஆய்ர் பின்னரே மாநில அரசு ஊயவிகிதத்தை மாற்றியமைபது பற்றிக் கூறவியலு

என்று முதலமைச்சர் பக்வத்சலம் கூறினர்.

# அறிவியற் பாடங்களையும் தமிழிலே பயிற்றுவிக்க வேண்டும்!

## மதுரைநகர்க் கல்விக்குழுவின் வேண்டுகோள்.

மதுரை அக் 31—

மதுரை நகர் மக்கள் கல்விக்குழுவின் ஆண்டுப்பேரவை சௌராட்டிர உயர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்றது. கிருட்டிணய்யங்கார் தலைமை தாங்கினர்.

கல்விக்குழுச் செயலரும் சென்னை மதுரைப் பல்கலைக் கழகங்களின் பேரவை உறுப்பினருமான அ. சங்கரநாராயணன் ஆண்டறிக்கையை அளித்துப் பேசினர்.

கல்விக் குழு நிறைவேற்றிய முடிவுகளாவன:

அரசியல் கட்சிகள் மாணவர்களைத் தமது கருவியாகப் பயன்படுத்தாது, எங்கெங்கு மாணவர்கிளர்ச்சியினல் அமைதியின்மை நிலவுகிறதோ அங்கெல்லாம் அமைதிநிலை ஏற்படப் பாடுபடவேண்டும்.

கல்வி நிலையங்களில் கல்வி நிலையத் தலைவரின் இசைவின்றி காவற்றுறையினர் நுழையக் கூடாது என இக்குழு கருதுகிறது.

மாணவர்கள் தங்கள் குறைகளைத் தீர்க்க வன்முறைச் செயல்களில் ஈடுபடவேண்டாமென இக்குழு கேட்டுக் கொள்கிறது.


மாணவர் அமைதியின்மைக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழு அடுத்த பேரவைக் கூட்டத்தில் இதுபற்றிய அறிக்கையை அளிக்க வேண்டுமெனக் இக்குழு கேட்டுக் கொள்கிறது.

புகுமுகவகுப்புகளில் கலைப் பாடங்களைப் பயிற்றுவிக்கத் தமிழைப் பாடமொழியாக்கிய மாநில அரசையும் பல்கலைக் கழகங்களையும் இக்குழு பாராட்டுகிறது,

அடுத்த கல்வியாண்டிலிருந்து அறிவியற் பாடங்களையும் தமிழில் பயிற்றுவிக்க வேண்டுமெனத் தொடர்புடையோரை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

# உருக்காலைக்காக கிளர்ச்சி வேண்டாம்!

## மாணவர்கட்கு இராசாசி அறிவுரை



"பாரதம் பாரதமாக நிலைக்க வேண்டுமெனில் குடியாட்சிக் கட்டமைப்பு இன்றியமையாத தொன்றாகும். ஓர் எஃகு ஆலைக்காக முறையான குடியாட்சியைப் பாழாக்குவது வேண்டப்படாத செயலாகும்.

இளைஞர்கள் தங்கள் ஆற்றலை இத்தகைய சிறுமையான ஆரவாரங்களில் வீணாக்குவது காலத்திற்கேற்றதன்று. நாட்டு நலனுக்கும் உகந்ததன்று. இளைஞர்கள் நாட்டுநலனுக்கான அருமபெருஞ் செயல்களை ஆற்ற வேணடும்.

குழப்பமும் ஆரவாரமும் தான் நமது முதன்மையான பகைவர்கள். அயல்நாட்டார் நம்மைக் குறைத்து மதிப்பிடுவதற்கு இவையே காரணம்.

எனவே மாணவர்கள் தங்கள் வன்முறைக் கிளர்ச்சியைக் கைவிட வேண்டும்.

தென்னிந்தியாவில் ஒரு குறிப்பிட்ட பகுதியில்தான் உருக்காலை அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக வெற்றாரவாரக்கிளர்ச்சி நடத்துதல் வேண்டற்பாற்றன்று"

என சுதந்திரக்கட்சித் தலைவர் இராசாசி அவர்கள் தமது "சுயராச்சியா" இதழில் குறிப்பிட்டுள்ளார்.

## சப்பானின்செயற்கைக் கோள்

### விண்வெளியில் வெற்றிகரமாக ஏவப்பட்டது.

இயூசு நவ. 1—

மிகப்பெரிய அளவிலான செயற்கைக்கோள் ஒன்றை சப்பான் விண்வெளியில் ஏவியுள்ளது. இது 70 அடி நீளமும் 4 டன் எடையும்கொண்டதாகும். இது இயூசு தளத்தினின்றும் ஏவப்பட்டது. இது விண்வெளியை அடைந்ததுமே அறிவியல் வல்லுநர் "வெற்றி! வெற்றி!" எனக் கூவினர்.

## பாவேந்தர் விழா

மதுரை நவ. 1

மதுரை அமெரிக்கன் கல்லூரித் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் பாவேந்தர் பாரதிதாசன் விழா 28-10-66 வெள்ளி, 4 மணிக்குக் கொண்டாடப்பட்டது. மா. கி. இராசா தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். அமைச்சர் இரா. சதாசிவம் வரவேற்றுப் பேசினர். கு. பரமசிவன் எம். ஏ. தலைமை தாங்கினர். விருதைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் க. திருமாறன் அவர்கள் "இருளும், ஒளியும்" எனும் பொருளில் உரையாற்றினர். துணை அமைச்சர் வி கிருட்டிணமூர்த்தி நன்றி நவின்றார்.

# திருவில்லிபுத்தூரில் உணவுப் போராட்டம்

## கொட்டும் மழையில் அனைத்துக் கட்சியினர் ஊர்வலம்!

(குறள்நெறிச்செய்தித்துறை)

திருவில்லிபுத்தூர் நவ, 1—

இங்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று கூடி மக்களுக்கு முறையாய்க் கிடைக்க வேண்டிய உணவுப் பங்கீட்டைத் தர இயலாத ஆட்சியின் போக்கை எதிர்த்து ஓர் ஊர்வலம் நடத்தினர்.

ஊர்வலம் மாரியம்மன் கோவில் தெருவிலிருந்துபுறப்பட்டு நகரின் முதன்மைச் சாலை வழியே சென்றது. ஊர்வலத்தினர், "உணவு தர முடியாத காங்கிரசே! ஆட்சியை விட்டு ஓடு" எனக் கொட்டும் மழையில் முழக்கமிட்டுச்சென்றனர். இறுதியாக திருவில்லிபுத்தூர் வட்ட அலுவலகத்தை அடைந்தனர். வட்ட உணவுத் துறை அலுவலரைச் சந்தித்து "உணவுப் பங்கீட்டை எட்டு அவுன்சாக உயர்த்த வேண்டும். 500 உணவுப் பகீடு அட்டைகளுக்கு ஓர் அசிக் கடை வீதம் வேண்டு" எஸ்ற வேண்டுகோளடங்கி விண்ணப்பம் ஒன்றை அளித்தனர்,

இறுதியாக வடக்கு இர வீதியில் வழக்கறிஞர் வி. இராதாகிருட்டிணன் தலைமையில்அனைத்துக்கட்சிப்பொது கூட்டம் நடைபெற்றது.

எசு. டி. கொழுந்து(தி.மு.க செயப்பிரகாசம் (இடதுசாரி வரதராசன், இசக்கி (வலது சாரி) முத்தையா (முன்னேற்றக் கட்சி) ஆகியோர் விலைவாசி உயர்வு குறித்தும் ஆளுங்கட்சியின் திறமையற்ற போக்கினைக் குறித்துப் பேசினர்.

★

## அறிவிப்பு

'குறள்நெறி' நாளிதழ், தாள் பங்கீட்டு உரிமை கிடைக்கப் பெருமையால் நிறுத்தப்பட்டிருந்தது. இப்பொழுது அவ்வுரிமை கிடைக்கப்பெற்றுள்ளது. ஆயினும் தாள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. தாள் கிடைக்கும் வரையில் சிறிய அளவில்தான் வெளிவரும். தாள் கிடைத்தவுடன் பெரிய அளவில் வெளிவரும்.

— ஆசிரியர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் டாக்டர் சி. இலக்குவனர். பொறுப்பாசிரியர் ஐ. மறைமலை B. Sc. அச்சிட்டது: குறள்நெறி அச்சகம் திருப்பரங்குன்றம், மதுரை ப் தொலைபேசி: 8-65